செ.வெ.எண்:17 நாள்:09.01.2017

# அரியலூர் மாவட்டத்தில் தோட்டக்கலைத் துறையின் மூலம் நடைபெற்றுவரும் திட்ட பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப., அவர்கள் இன்று (09.01.2017) நேரில் சென்று ஆய்வு செய்தார்.

அரியலூர் மாவட்டம், செந்துறை ஒன்றியத்தில் தோட்டக்கலைத் துறையின் மூலம் நடைபெற்றுவரும் திட்ட பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் **திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப.,** அவர்கள் இன்று (09.01.2017) நேரில் சென்று ஆய்வு செய்தார்.

**இவ்வாய்வின்போது, மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்ததாவது :-**

அரியலூர் மாவட்டம், செந்துறை ஒன்றியம், சொக்கநாதபுரம் கிராமத்தைச் சேர்ந்த செல்வம் த/பெ.முருகன் என்பவர் 5 ஏக்கரில் ரெட்லேடி (Red Lady) ரகப் பப்பாளியை சொட்டுநீர் பாசனத் திட்டத்தின் மூலம் பயிரிட்டுள்ள நிலத்தினையும், சிறுகளத்தூர் கிராமத்தை சேர்ந்த வேல்முருகன் த/பெ.வைத்தியலிங்கம் என்பவர் 1 ஏக்கர் நிலத்தில் ரெஜர்வால் (Prejarwal) ரக சம்மங்கி பூ மலைத்தூவான் மற்றும் சொட்டுநீர் பாசனத்தை பயன்படுத்தி சிறப்பாக விவசாயம் செய்து வருகிறார். பொன்பரப்பி கிராமத்தைச் சேர்ந்த பாண்டியன் த/பெ.ரெங்கசாமி என்பவர் முந்திரி கன்றுக்கு மாற்று பயிராக 10 ஏக்கர் நிலத்தில் நிலப்போர்வை மூலம் சொட்டுநீர் பாசனம் பயன்படுத்தி சம்மங்கி, கல்தூன் பந்தல் மூலம் பாகற்காய், புடலை, பீர்க்கங்காய், திசுவாழை ஆகியவை பயிரிடப்பட்டு, சிறப்பான முறையில் விவசாயம் செய்து வருகிறார். தோட்டக்கலைத் துறையின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் சொட்டுநீர் பாசனத் திட்டம், நிலப்போர்வைத் திட்டம், மழைதூவான் திட்டம் மூலம் பயிர்கள் நன்கு விளைந்து நல்ல மகசூல் கிடைக்கிறது. எனவே, விவசாயிகள் சொட்டுநீர் பாசனத்தை பன்படுத்தி விவசாயிகள் தங்களது வயல்களில் நல்ல மகசூல் பெறவேண்டும் என **திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்தார்.

இவ்வாய்வின்போது, தோட்டக்கலை துணை இயக்குநர் திரு.அன்புராஜன், மாவட்ட ஆட்சியர் நேர்முக உதவியார் (வேளாண்மை) திரு.இளங்கோவன், உதவி இயக்குநர் (பொ) திரு.சிவக்குமார், செந்துறை துணை தோட்டக்கலை அலுவலர் திரு.இராஜேந்திரன் மற்றும் தோட்டக்கலை அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.